


# மாண்டரின் பிளவுஸ்

*இது எல்லா முன்னணி நட்சத்திரங்கள் மாடல்கள் போட்டுட்டு இருக்கறதை நாம பாக்கறோம், முக்கிய பிராண்டுகள் இந்த ஸ்டைலை நம்பிட்டு இருக்கு.*




## தேவைப்படும் பொருள்கள்

45 மீ அகலத்துல 1 மீட்டர் சீக்வின் துணி
45 "அகலத்துல லைனிங்குக்கு1 மீட்டர் சாடின் துணி
¼ மீட்டர் திக்கான இன்டர்லைனிங் ஃப்யூசிங்
மாண்டரின் பிளவுஸ்க்கான டெம்ப்ளேட்ட நீங்க உங்க www.ushasew.com வெப்சைடிலிருந்து டவுன்லோட் செய்துக்கலாம்.
திறக்கக்கூடிய 14 அங்குல மெட்டாலிக் ஜிப்பர்
2 ஹூக் அப்புறம் ஐ செட்
மணிகோர்த்த பின்
சாக்
அளக்கும் டேப்
ஸ்கேல்
உஷா ஜானோம் ஜிப்பர் ஃபூட்
கை ஊசி
கத்தரிக்கோல்
மேட்சிங் நூல்



இந்த வீடியோல, டெம்ப்ளேட்டிலிருந்து மாண்டரின் காலர் பிளவுஸ் பீஸ்க்கு தேவைப்படற பீஸ எப்படி கட் பண்றது, லைனிங், மெயின் பீஸ்ல்லாம் ஒன்னா எப்படி ஜாயின் பண்றது, பிளவுசோட முன் பக்க, பின் பக்க பீஸ எப்படி இணைக்கறது, பயாஸ் ஸ்ட்ரிப்போட ஹெம் பண்றது, ஒரு ஜிப்பரை அட்டாச் பண்றது அப்புறம் கடைசியா இதுல ஹைலைட்டான காலரை எப்படி உருவாக்கறதுல்லாம் கத்துக்கப்போறோம்.




## ஸ்டெப் 1 டெம்ப்ளேட் மார்க்கிங் & கட்டிங்

நாம முதல்ல சீக்வின் துணில தொடங்கலாம், அதை விரிச்சு நீளவாக்குல மடிச்சு டேபிள்ல வைங்க. www.ushasew.com மிலிருந்து டவுன்லோட் செய்த மாண்டரின் பிளவுஸ்க்கான டெம்ப்ளேட்ட துணிமேல வைங்க. இதுல காட்டியிருக்க மாதிரி முன்பக்க டெம்ப்ளேட்ட வையுங்க. அப்புறம் பின்பக்க டெம்ப்ளேட்ட வைங்க. பின்பக்க டெம்ப்ளேட் மடிப்புல வைக்கப்படல அப்டீங்கறதை நீங்க பாக்கலாம் ஏன்னா நமக்கு பின்பகுதியோட ரெண்டு தனித்தனி பீஸ் தேவை. மீதி இருக்கற துணில காலர் டெம்ப்ளேட்ட அட்ஜஸ்ட் பண்ண யூஸ் பண்ணிக்கொங்க . காலர் டெம்ப்ளேட்ட சீம் அலவன்ஸ்ல வைக்கறதை உறுதி செய்துக்கொங்க ஏன்னா அந்த இன்னொரு டெம்ப்ளேட் ஃப்யூசிங்காக. மணி கோர்த்த பின்னால அதை சரியான இடத்தில பின் பண்ணுங்க. துணில இந்த டெம்ப்ளேட்ட மார்க் பண்ண சாக் யூஸ் பண்ணுங்க. துணில மெதுவா அந்த மெட்டீரியலை ட்ரேஸ் பண்ணுங்க. இதை நீங்க செய்து முடிச்சதும், டெம்ப்ளேட்டிலிருந்து பின்ன எடுத்துருங்க. டெம்ப்ளேட்ட நீக்கிட்டு கட் பண்றப்ப துணி இடத்திலிருந்து விலகாம இருக்கறதை உறுதிசெய்துக்க மறுபடியும் துணில பின் பண்ணுங்க.










கத்தரிக்கோலால துணியிலிருந்து பீஸ்ஸ கட் பண்ணுங்க. முன் பகுதியிலிருந்து தொடங்கி அப்றம் காலரையும் பின்பகுதியையும் கட் பண்ணுங்க. அதே மாதிரி, டெம்ப்ளேட்ட யூஸ் பண்ணி சாடின் லைனிங் துணியிலிருந்து தேவையான பீஸ்-அ நாங்க வீடியோல காட்டியிருக்க மாதிரி கட் பண்ணுங்க. இப்ப உங்ககிட்ட முன், பின் அப்றம் காலர் பீஸ் இருக்கணும். காலருக்கு நமக்கு 2 பீஸ் சாடின் லைனிங் துணி தேவை.







இந்த எல்லா பீசும் கிடைச்ச பிறகு, ஃப்யூசிங்க வெளிய கொண்டு வாங்க. ஃப்யூசிங் துணிக்கு கூடுதல் ஸ்திரத்தன்மைய கொடுக்க துணிய அதன் ஷேப்ல வைச்சிக்கிறதை உறுதி செய்துக்கவும் யூஸ் ஆகுது. நாம இதை காலருக்கு யூஸ் பண்ணிக்குவோம். பளபளன்னு இருக்கற பகுதிதான் துணில ஒட்டிக்கப்போற ராங் சைட். ஃப்யூசிங் ரைட் சைட்ல சீம் அலவன்ஸ் இல்லாத காலர் டெம்ப்ளேட்ட வைச்சு அதை சாக்கால ட்ரேஸ் பண்ணுங்க. இந்த டெம்ப்ளேட் சீக்வின் துணிக்கு நாம யூஸ் பண்ணின காலர் டெம்ப்ளேட்ட விட கொஞ்சம் நேரோவா இருக்கும். காலர் பீசை கட் பண்ணி எடுங்க. ரொம்ப கவனமா இருக்கணும் ஏன்னா வளைஞ்ச பீஸ்னாலே தப்பா கட் பண்ணிற வாய்ப்பு அதிகம்.






இப்ப மீதி இருக்கற சாடின் லைனிங் துணிய எடுத்து வீடியோல காட்டியிருக்க மாதிரி பாதியா மடிங்க, அதிகப்படியா உள்ள துணிய கட் பண்ணிருங்க. இப்ப இந்த துணியிலிருந்து யாஸ் ஸ்ட்ரிப்ப கட் பண்ணிரலாம். துணி விளிம்பிலிருந்து ஒன்னரை இன்சு அளந்து மார்க் பண்ணிக்கங்க. இதையே துணி முழுக்க செய்யுங்க. இதை செய்து முடிச்சதும், ரூலரை யூஸ் பண்ணி மார்க் பண்ணின பாயின்ட வைச்சு ஒரு நேர்க்கோட்டை வரைங்க. ஸ்ட்ரிப்ப கட் பண்ணி எடுங்க. மற்ற ரெண்டு ஸ்ட்ரிப்புக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க, இப்ப மொத்தம் உங்ககிட்ட மூணு பயாஸ் ஸ்ட்ரிப் இருக்கணும்.

உங்க மாண்டரின் காலர் பிளவுஸ்க்கு உங்களுக்குத் தேவைப்படும் பீசஸ் இதுதான். மறுபடியும் சொல்றோம், இது நம்ம முன்பக்க பீஸ். இதுதான் காலர், இது ஃப்யூசிங், பின் பக்க பீசஸ் அப்புறம் பயாஸ் ஸ்ட்ரிப்.



**ஸ்டெப் 2 லைனிங் துணிய சீக்வின் துணியோட இணைச்சு டார்ட்ஸ் உருவாக்குதல்.**

முன் பக்க பீசை லைனிங்கோட சேர்த்து எடுத்துகிட்டு பின்னை நீக்கிட்டு துணி விரிங்க. சீக்வின் துணியோட ராங் சைட்-அ இதுல காட்டியிருக்க மாதிரி லைனிங் துணியோட ரைட் சைட்ல வையுங்க. மெயின் சீக்வின் துணியோட லைனிங் துணிய ஃபிக்ஸ் பண்ண பாயின்ட் செய்திருக்கற எல்லா இடத்திலயும் தைக்கலாம்.






இந்த பீசஸ உஷா வொண்டர் ஸ்டிட்ச் பிளஸ் தையல் மிஷினுக்கு கொண்டு போங்க. பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடியில துணிய அட்ஜஸ்ட் பண்ணிக்கொங்க ஸ்ட்ரிச் செலக்டார் டயலை ஏ-க்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணிக்கொங்க தைக்க ஆரம்பிங்க. தைக்கறப்ப ஏதாவது மூலைக்கு வந்தீங்கன்னா பிவோட்டிங் டெக்னிக்கை யூஸ் பண்ணுங்க, இப்டி செய்தா துணில ஊசி இருக்கறப்பவே துணிய உங்களால திருப்ப முடியும். ஆர்ம் ஹோல்லேந்து நெக்லைன் வரை அப்புறம் பக்கங்களும் முன் பக்கம் முழுசும் தைக்கணும். நூலை கட் பண்ணிருங்க. உங்க முன் பக்கம் பாக்க இப்படி இருக்கணும், ஆனா வேலை இன்னமும் முடியல. மறுபடியும் டெம்ப்ளேட்டை வெளிய எடுத்து அதை ஒரு பாதில வைங்க. அடிப்பகுதில ரெண்டு நோட்ச்-ம் நடுல புள்ளியும் இருக்கறதை கவனிங்க.







இதுதான் டார்ட்டுக்கான மார்க். டெம்ப்ளேட்ல சுட்டிகாட்டப்பட்ட டார்ட்டுகளை சாக்கால மார்க் பண்ணுங்க. இது முடிஞ்சதும், டெம்ப்ளேட்ட ஃப்ளிப் பண்ணி இன்னொரு பாதிலயும் மூணு பாயின்டை அதே மாதிரி மார்க் பண்ணுங்க. அப்புறம் ரூலரை யூஸ் பண்ணி டெம்ப்ளேட்ட நீக்கிட்டு ரெண்டு நோட்ச்ஸ அப்புறம் ஒரு டாட்-அ இதுல காட்டி இருக்க மாதிரி ஆங்கிள் டார்ட்ட உருவாக்க ஜாயின் பண்ணுங்க. இதை ரெண்டு பக்கத்துக்கும் பண்ணுங்க. உங்க கோடுங்க நேரா இருக்கறதை உறுதி செய்துக்கங்க.




இப்ப இந்த டார்ட்ஸ தைக்கணும், வீடியோல காட்டியிருக்க மாதிரி ரெண்டு முனைகளையும் மேட்ச் பண்ணி லைனுக்கு மேல தையுங்க. தையல் பிரியாம இருக்க ரிவர்ஸ் தையல் போட மறக்காதீங்க. நூலை கட் பண்ணிட்டு அடுத்த பக்கத்தையும் இதே மாதிரி செய்யங்க. லைன்ஸ மாட்ச் பண்ணிட்டு, அதுக்கு மேல தையுங்க. இது முடிஞ்சதும், அதிகப்படியா உள்ள எல்லா நூலையும் கட் பண்ணுங்க. உங்க முன் பகுதி பின்னாலிருந்தும் முன்னாலிருந்தும் பாக்க இப்படி இருக்கணும்.







இப்ப பின்பக்க பீசை எடுத்துட்டு பின்-அ நீக்கணும். நம் முன் பீஸ் மாதிரி இல்லாம, பேக் பீஸ் லைனிங்-அ தவிர ரெண்டு வெவ்வேற பிரிவுகளா இருக்கும், அது ஏன்னு நீங்க யோசிக்கலாம், ஏன்னா இதுதான் ஜிப்பர்சோட குளோசர் இருக்கிற பிளவுசோட ஓபனிங்.

முன் பக்க பீஸ் போலவே, மெயின் சீக்வின் துணியோட ராங் சைட்-அ சாடின் லைனிங் துணியோட ராங் சைட்-ல வைக்கணும். லைனிங்க மெயின் துணியோட அதை முழுக்க தைச்சு நம்ம அட்டாச் பண்ணுவோம்.




மறுபடியும், துணிய உங்க உஷா வொண்டர் ஸ்டிட்ச் பிளஸ் தையல் மிஷினுக்கு கொண்டு போய் முதல்ல ஒரு பீசை தைங்க. வீடியோல காட்டியிருக்க மாதிரி அது முழுவதும் தைச்சிட்டேன், முனைக்கு வரும்போது, பிவோட் டெக்னிக்க யூஸ் பண்ணுங்க, அப்பதான் அது முழுக்க தொடர்ச்சியான ஒரே தையலா இருக்கும்.








நூலை கட் பண்ணிட்டு அடுத்த பீசுக்கு போகலாம். நீங்க தைச்சு முடிச்ச ரெண்டு பீஸ் பாக்க இப்படி இருக்கணும்.

இப்ப நாம பின் டார்ட்ஸ பாக்கலாம், பின்பக்க டெம்ப்ளேட்டை துணிக்கு மேல வைச்சு டெம்ப்ளேட்ல குறிப்பிட்ருக்கற மூணு பாயின்ட்ஸ மார்க் பண்ணனும். டெம்ப்ளேட்ட திருப்பி அடுத்து பீஸ்லயும் மார்க் பண்ணிக்கொங்க இது முடிஞ்சதும், ரூலரை எடுத்துட்டு மார்க் பண்ணின டார்ட் பாயின்ட்டுகளை ஜாயின்ட் பண்ணுங்க. ஒரு நேர்க்கோடா மார்க் செய்துருக்கறதை உறுதி செய்துக்கொங்க இந்த டார்ட்ஸ தைக்க, அடிப்பக்க டார்ட் பாயின்ட்ஸ அலைன் பண்ணிகிட்டு, துணி இதுல காட்டியிருக்க மாதிரி மடிச்சிக்கொங்க, இப்ப மார்க் செய்த லைன்ல தையுங்க, இந்த ஸ்டெப்புக்கு ரிவர்ஸ் தையல் ரொம்ப முக்கியம். அடுத்த பீஸ்லயும் அதே பிராசஸ ரிபீட் பண்ணனும். உபரியா உள்ள நூலை கட் பண்ணிருங்க. நாம தைச்ச டார்ட்ஸ் பாக்க இப்படி இருக்கணும்.











**ஸ்டெப் 3 முன், பின் பக்க பீஸ்களை தோள்பட்டை & சைட் சீம்ஸ தைத்து அட்டாச் செய்தல்.**

அடுத்து தோள்பட்டைகளை ஜாயின்ட் பண்றது மூலம் முன், பின் பீஸ்களை அட்டாச் பண்ணனும். முன் பீசுக்கு மேல ரெண்டு பேக் பீஸ்களை வையுங்க, ரைட் சைட் ரைட் சைடை பாத்துட்டு இருக்கணும், இப்ப ரெண்டு ஷோல்டர்ஸயும் பின் பண்ணுங்க. பிரஸ்ஸர் ஃபுட்ட வைச்சு தோள்பட்டையின் விளிம்பை அலைன் பண்ணிகிட்டு தைக்க ஆரம்பிங்க. தைச்சிட்டே பின்னை நீக்கிட்டே போங்க. அடுத்த தோளுக்கும் இதே மாதிரி செய்யுங்க. இதுதான் நம்ம நேர் தையல் ஆனா விளிம்பு பிரிஞ்சு வர்றதை தவிர்க்க, நாம ஜிக்-ஜாக் தையல் இதுக்கு மேல போடணும். பேட்டன் செலக்டார் டயலை Cக்கும் தையல் நீளத்தை 1.5க்கும் செட் பண்ணிகிட்டு தோள்பட்டை விளிம்புல தையுங்க. ஜிக்-ஜாக் தையல் போடறப்ப ரிவர்ஸ் தையல் போட வேண்டியதில்லை. இது முடிஞ்சதும், கூடுதலா உள்ள நூலை கட் பண்ணிருங்க. இந்த துணி எவ்வளவு நேர்த்தியா இருக்குல்ல? தைச்சு முடிச்சப்பறம் ரெண்டு பீஸும் பாக்க இப்படித்தான் இருக்கணும்.
தோள்களை தைச்சதும் பக்கங்களை தைக்கணும். வீடியோல காட்டிருக்க மாதிரி பின் பண்ணிட்டு சீம் அலவன்ஸ் மேல தைக்கணும்.

மெட்டீரியலை பிரஸ்ஸர் ஃபுட்டுக்கு கீழ வைச்சு பேட்டன் செலக்டார் டயலை நேர் தையல் Aக்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணிகிட்டு தைக்க ஆரம்பிங்க. தையல் பிரிஞ்சு வராம இருக்க ஆரம்பத்திலயும் முடியற இடத்திலயும் ரிவர்ஸ் தையல் போடுங்க. தைச்சிட்டு போகறப்ப பின்-அ நீக்கிட்டே வாங்க, முடியற இடத்துக்கு வந்ததும் பிரஸ்ஸர் ஃபுட்ட லிஃப்ட் பண்ணிட்டு நூலை கட் பண்ணிட்டு அடுத்த பக்கத்துக்கு போயிருங்க. தைக்க இதே பிராசஸயே ரிபீட் பண்ணுங்க. நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும்.








**ஸ்டெப் 4 ஆர்ம் ஹோல்ஸ், பாட்டம் ஹெம்முடன் பயாஸ் ஸ்ட்ரிப்-ஐ அட்டாச் செய்தல்.**

நம்ப பிளவுசோட அடிப்படை ஸ்ட்ரக்சர் முடிஞ்சிருச்சு, அடுத்தது பயாஸ் ஸ்ட்ரிப்ப அட்டாச் பண்ற வேலை. ஒரு ஸ்ட்ரிப் அடிப்பகுதிக்கும் மற்ற ரெண்டும் ஆர்ம்ஹோல்ஸ்கும் பயன்படுத்தப்படும். தொடக்கத்துல பயாஸ் ஸ்ட்ரிப்ல ¾" இன்ச் விட்டுட்டு இதுல காட்டி இருக்க மாதிரி துணி மேல ஆர்ம் ஹோல சுத்தி ஸ்ட்ரிப்போட ரைட்சைட் ரைட் சைட்-ல வையுங்க. பிரஸ்ஸர் ஃபூட்டோட விளிம்புல இதை அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. நீங்க தொடங்கின இடத்துக்கு வர்றப்ப நிறுத்துங்க. நூலை கட் பண்றதுக்கு முன்னால ஜாயின்ட் வரைக்கும் ஸ்ட்ரிப்ப அலைன் பண்ணி இதுல காட்டியிருக்க மாதிரி பயாஸ் ஸ்ட்ரிப்ப செங்குத்தா தையுங்க. அரை இன்ச் அதிகமா விட்டுட்டு அதிகப்படி ஸ்ட்ரிப்ப வெட்டிருங்க. இப்ப மீதி உள்ள ரெண்டு இன்ச்-அ தையுங்க அப்புறம் பயாஸ் ஸ்ட்ரிப்போட சீம்-அ ஃபிளாட்டன் பண்ணி அதுக்கு மேல தையுங்க. இது முடிஞ்சதும், இன்னொரு ஆர்ம்ஹோலுக்கு போய் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க.





நம்ப ஆர்ம்ஹோல் வேலை முடிஞ்சுது.

இப்ப பிளவுசோட அடிப்பகுதிக்கு போகலாம். பயாஸ் ஸ்ட்ரிப்ப பாதியா மடிங்க, ராங் சைட், ராங் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி அதை பிளவுசோட அடிப்பகுதில, பயாஸ் ஸ்ட்ரிப்போட மடிச்ச சைட்-ல வெச்சு பாட்டமோட முனைகளை விரிங்க. பிளவுசோட பாட்டம் எட்ஜ் இதுல காட்டியிருக்கற மாதிரி உள்பக்கமா ½ இன்ச் மடிங்க. ஸ்ட்ரிப்போட ஆரம்பத்தில ¾ இன்ச் விட்ருங்க. துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில செட் பண்ணி தைக்க ஆரம்பிங்க. கை ஆடாம இருக்கறதை உறுதி செய்துக்கங்க அப்புறம் பயாஸ் ஸ்ட்ரிப் முழுசும் சரியா மடிக்கப்பட்ருக்கறதை உறுதி செஞ்சுக்கங்க. பிளவுசோட முன் பக்கத்தோட ஒரு பக்கத்திலிருந்து பின் பக்கம் வரை அப்புறம் முன் ஒபனிங்கோட இன்னொரு பக்கம் வரை முழுக்க தையுங்க. ஒபனிங்கோட இன்னொரு முனைக்கு வர்றப்ப ஸ்ட்ரிப்புல ரெண்டு இன்ச் விட்டுட்டு அதிகமா உள்ள பயாஸ் ஸ்ட்ரிப்ப கட் பண்ணி எடுங்க.






இது முடிஞ்சதும், ஆர்ம்ஹோல்லயும் பாட்டம்லயும் அட்டாச் பண்ணின பயாஸ் ஸ்ட்ரிப்புல டாப் தையல் போடுவோம், இது சர்குலர் ஸ்ட்ரிப் ஃபிளாட்ட இருக்கறதையும் ஃபினிஷிங் நேர்த்தியா இருக்கறதையும் உறுதி செய்யும். வீடியோ காட்டியிருக்க மாதிரி தையுங்க. ஆர்ம் ஹோல்லயும் டாப் தையல் போடுங்க. அதிகமா உள்ள நூலை கட் பண்ணிட்டு, பிளவுசோட பாட்டம்க்கு போங்க. பாட்டம் பயாஸ் ஸ்ட்ரிப்போட மடிப்பு ஃபிளாட்டா, ஈவனா இருக்கறத நீங்க அதுக்கு மேல டாப் ஸ்ட்ரிச் போடறப்ப உறுதி செய்துக்கொங்க நீங்க தைச்சு முடிச்சப்பறம் அது பாக்க இப்டி இருக்கணும். இதுதான் ஆர்ஹோல்ஸ், அப்புறம் இதுதான் பிளவுசோட பாட்டம் ஹெம்.



**ஸ்டெப் 5 ஜிப்பர் அட்டாச் செய்தல்**




அடுத்த ஸ்டெப், பிளவுசுல ஜிப்பர் அட்டாச் பண்றது. 14 இன்ச் ஓபன் என்ட் உள்ள மெட்டாலிக் ஜிப்-அ எடுத்துக்கொங்க இதை அட்டாச் பண்ண, பிளவுசோட பின் பகுதியின் ஒரு பக்கத்தை அரை இன்சு மடிச்சு, இதுல காட்டியிருக்க மாதிரி ஜிப்பரோட ரைட் சைட்ல வைச்சு பின் பண்ணுங்க. இது சரியான இடத்தில இருக்க பின் மடிப்புக்கு உள்ளயும் ஜிப்பர்குள்ள நுழையுதான்னு பாத்துக்கங்க. ஜிப்ப முழுசா ஓபன் பண்ணுங்க.








பிளவுச திருப்பிகிட்டு இன்னொரு ஓபன் என்ட் வேலைய பாக்கலாம். இப்ப இன்னொரு பகுதிய அரை இன்ச் மடிச்சிகிட்டு ஜிப்போட இன்னொரு முனையில வையுங்க. மடிச்ச எட்ஜ் ஜிப்பரோட ரைட் சைட்-ல வைக்கணும். தைக்க ஈசியா இருக்க அதை சரியான இடத்தில வைச்சு பின் பண்ணிருங்க. இப்ப ஜிப்பர மூடிட்டு பின் பண்ணின பகுதில அதை துணியோட அட்டாச் பண்ண தைக்கணும்.

தையல் மிஷினுக்கு பிளவுச கொண்டு போங்க. தைக்க ஈசியா இருக்க மறுபடியும் ஜிப்பரை திறங்க, அப்புறம் ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்-க்கு பதிலா உஷா ஜானோம் ஜிப்பர் ஃபூட்-அ மாத்துங்க.

இதைச் செய்து முடிச்சதும், துணியோட முனைய பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போட மறக்காதீங்க, ஏன்னா இது ஜிப்பரை அட்டாச் பண்ணும்போது போட வேண்டியது முக்கியம். நூலை கட் பண்ணிட்டு ஜிப்-ன் இன்னொரு பக்கத்தையும் தையுங்க. தைச்சிட்டே போகப்போக பின்-அ எடுத்துட்டே வாங்க. அட்டாச் பண்ணின ஜிப்பர் துணில சிக்கிக்காம சுலபமா ஓபன் பண்ண வரணும், அப்புறம் நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும்.

**ஸ்டெப் 6 காலர் உருவாக்குதல்**












ஜிப்பரை அட்டாச் பண்ணி முடிச்சதும், இந்த பிளவுசோட முக்கிய ஹைலைட்டான காலர் வேலைய ஆரம்பிக்கலாம். மெயின் சீக்வின் காலர் பீஸ், ரெண்டு லைனிங் துணி காலர் பீசஸ் அப்புறம் ரெண்டு இன்டர்லைனிங் ஃப்யூசிங் காலர் பீசஸ் உங்ககிட்ட இருக்கணும். இப்ப நீங்க பளபளப்பான அல்லது ஃப்யூசிங் துணியின் ராங் சைட்-அ லைனிங் துணியின் ராங் சைட்ல வைச்சு அயர்ன் பண்ணனும் அப்பதான் அது அதுல ஒட்டிகிட்டு கூடுதல் ஸ்திரத்தன்மைய கொடுக்கும் சும்மா துணிய ஃப்யூசிங் சைட்-அ மேல அப்டியே அயர்ன் டேபிள்ல வைச்சு அயர்ன் பண்ணினாலே ஒட்டிக்கும். இதையே ரெண்டு பீசுக்கும் தனித்தனியா செய்தாகணும். இப்ப ஒரு லைனிங் பீஸ திருப்புங்க, ரைட் சைட் மேல இருக்கணும், அதுக்கு மேல மெயின் துணிய வையுங்க. இப்ப இதுல காட்டியிருக்க மாதிரி இன்னொரு லைனிங் துணியோட ரைட் சைட்-அ மெயின் துணிக்கு மேல வையுங்க. செய்து முடிச்சதும், இந்த பீசஸயும் ஒன்னா சேர்த்து நாம தைக்கப் போறோம். காலரை சரியான இடத்தில பின் பண்ணுங்க, எல்லா துணிலயும் மணி கோர்த்த பின் நுழையுதான்னு பாத்து உறுதி செய்துக்கொங்க தைக்கறதுக்கு முன்னால, ஜிப்பர் ஃபூட்-க்கு பதிலா ரெகுலர மாத்திக்கொங்க ஃப்யூசிங் துணியிலிருந்து தைக்க ஆரம்பிங்க, துணியின் மேலிருந்து தொடங்கவே கூடாது. இன்டர்லைனிங் ஃப்யூசிங் முனைக்கு போய் சேர்ந்த உடனே, துணிய திருப்புங்க. நாம காலர் மெட்டீரியல்ஸ ஒன்னா சேர்ந்து ஒரே தொடர் தையல் போட்டு தைக்கப் போறோம், ஆனா நாம மூனு பக்கங்களைதான் தைப்போம், அது ஏனு நம்ம பாக்கலாம்.










இது முடிஞ்சதும், அதிகப்படியா உள்ள நூலை கட் பண்ணிட்டு பின்னை நீக்கிருங்க. துணில இப்ப நாம பக்கத்தில நோட்ச் உருவாக்கணும். அதோட வீடியோல காட்டியிருக்க மாதிரி விளிம்புகளை குறுக்கால வெட்டணும், தையலை கட் பண்ணக்கூடாதுங்கறதை மறக்காதீங்க. இது முழுக்க நோட்ச்களை தொடர்ந்து கிரியேட் பண்ணுங்க, இது சர்குலர் தையலை ஃபிளாட்டன் பண்ண உதவும். மறுபடியும், நோட்ச் கிரியேட் பண்றப்ப தையல் கட் பண்ணிரக்கூடாதுங்கறதை மறக்காதீங்க.

வீடியோல காட்டியிருக்க மாதிரி தைக்கப்படாத பக்கத்திலிருந்து காலரை வெளிய திருப்பணும். பிளவுசோட ரைட் சைட்-அ காலரோட ரைட் சைட்ல வையுங்க, காலரோட் முனை வீடியோல காட்டியிருக்க மாதிரி ஜிப்பரோட முனைல அலைன் ஆகியிருக்கணும் அப்புறம் அதை அதன் இடத்தில வைச்சு பின் பண்ணுங்க, தொடர்ந்து காலர் முழுக்க பின் பண்ணுங்க.

தைக்க ஈசியா இருக்க, ஜிப்-அ ஓபன் பண்ணி காலரோட எட்ஜ ஜிப்பர் ஃபூட்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. இன்னொரு பக்கத்துக்கு தைச்சிட்டு போகறப்ப பின்ன எடுத்துட்டே போங்க. இப்ப நாம காலரை தைச்சு அட்டாச் பண்ணிட்டதை நீங்களே பாக்கலாம்.








## ஸ்டெப் 7 காலர், ஆர்ம் ஹோல் முடித்தல் மற்றும் கையால் ஹெம் செய்து அடிப்பகுதியை முடித்தல்.

நேர்த்தியான ஃபினிஷிங்குக்கு, காலரோட திறக்கப்பட்ட முனைய கையால தையுங்க. காலர் தைச்சு முடிச்சதும், நாம ஆர்ம்ஹோல்ஸ ஹெம் பண்ணுவோம் அப்புறம் பயாஸ் ஸ்ட்ரிப்ப உள்பக்கமா மடிச்சு அதுக்கு மேல தெச்சு கீழ்ப்பகுதிய முடிக்கணும். கூடுதல் பயாஸ் ஸ்ட்ரிப்பயும் அடிப்பகுதில உள்பக்கமா மடிச்சு அதைத் தையுங்க. முனை வரையிலும் தொடர்ந்து தையுங்க.

இந்த ஸ்டெப் முடிஞ்சதும், ரெண்டு ஹூக்கை எடுத்துகிட்டு அதை பர்ஃபெக்டா ஃபிட்-ஆக பிளவுஸ் காலர்ல அட்டாச் பண்ணுங்க. ஹூக்கோட ஐ-ய தைக்க மறக்காதீங்க.

இப்ப உங்க பிளவுஸ் தைச்சு முடிச்சாச்சு. லைட் சேலையோட இதை மேட்ச் பண்ணிக்கங்கன்னு நாங்க ரெகமன்ட் பண்றோம், ஏனனா இந்த பிளவுஸ், பாக்கறவங்கள 'வாவ்'னு சொல்ல வைக்கும். உங்க பெஸ்ட் ஃபிரெண்ட் கல்யாணம் அல்லது உங்க குடும்ப கொண்டாட்டங்களுக்கு ரொம்ப சரியான ஆடை. வேற எந்த பிளவுசஸ நீங்க பாக்க விரும்பறீங்கன்னு சொல்லுங்க. இந்த வீடியோவ லைக் பண்ண, கமெண்ட் பண்ண, சப்ஸ்கிரைப் பண்ண மறக்காதீங்க.

